

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 328 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 24 – திங்கள்கிழமை 08 ஜூலை 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 328 : Thiruvalluvar Year - 2055 - Aani 24 - Monday 08 July 2024 - Madurai 8 Pages ₹ 5.00


### ‘உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்’ - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் !

# விக்கிரவாண்டியில் - உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் !

## கிராமம் கிராமமாகச் சென்று இன்று இறுதி கட்ட வாக்கு சேகரிப்பு !

**சென்னை, ஜுலை 8-**

**விக்கிரவாண்டி தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்’ என்று காணொலி உரையில் தொகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். விக்கிரவாண்டி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று கிராமம் கிராம மாகச் சென்று இறுதி கட்ட வாக்கு சேகரிக்கிறார்.**



விழுப்புரம் மாவட்டம் - விக்கிர வாண்டி சட்டப்பேரவைத் தொகுதியின் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்த புகழேந்தி அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி உடல் நலக்குறைவால் மறைவுற்றதைத் தொடர்ந்து, இத் தொகுதி காலியாக இருப்பதாக சட்டப் பேரவைச் செயலகம் தேர்தல் ஆணை யத்துக்கு தகவல் அனுப்பியது. இதைத் தொடர்ந்து விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஜுலை 10ஆம் தேதி நடைபெறும் என தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது.

இதையடுத்து கடந்த மாதம் 14ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் தொடங்கி யது. 24ஆம் தேதி மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்றது. தாக்கல் செய் யப்பட்ட64 வேட்புமனுக்களில் 35 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இறுதி வேட்பாளர் பட்டியல் கடந்த ஜுன் 26ஆம் தேதி வெளியிடப்பட்டது. 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

**அன்னியூர் சிவா**

**வேட்பாளர் – கழகத் தலைவர் அறிவிப்பு!**

விக்கிரவாண்டி தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்ததும் விக்கிரவாண்டித் தொகுதியில் கழக விவசாய தொழி லாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, ‘இந்தியா’ கூட்டணி சார்பில் கழக வேட்பாளராக போட்டியிடுவார் என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜுன் 11ஆம் தேதி அன்று அறிவித்தார்.

**தொகுதிக்கான தேர்தல் பணிக்குழு!**

அதனைத்தொடர்ந்துவிக்கிரவாண்டி சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர் தல் பணிக்குழுவை தலைமைக் கழகம் அறிவித்தது. இத்தேர்தல் பணிக்குழு வில் கழக துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் க.பொன்முடி, கழக கொள் கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத் ரட்சகன்,

காணை மத்திய ஒன்றியம் - கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் – அமைச்சர் எ.வ.வேலு, விக் கிரவாண்டிமேற்கு ஒன்றியம் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், காணை வடக்கு ஒன்றியம் - அமைச்சர் அர.சக்கரபாணி, கோலியனூர் மேற்கு ஒன்றியம் - அமைச்சர் தா.மோ.அன்பர சன், விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் - அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர், விக்கிரவாண்டி பேரூர் – அமைச்சர் சி.வி.கணே சன், காணை தெற்கு ஒன்றியம் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டாக்டர் ஆர். இலட்சுமணன் எம்.எல்.ஏ., ஆகியோரை நியமித்து தேர்தல் பணியாற்றிட தலைமைக் கழ கம் அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து ஜுன் 14ஆம் தேதி அன்று மாலை தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தேர்தல் பணிக் குழுவினர் விக்கிரவாண்டி தொகுதியில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆத ரித்து தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்டக் கழகத்தினர் தங்களது மாவட்டக் கழகத்தினருடன் தீவிர களப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**கழகத் தலைவர்**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!**

இந்நிலையில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 7ஆம் தேதி அன்று விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு காணொலி காட்சி உரை மூலமாக ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆத ரித்து வாக்களிக்குமாறு தொகுதி மக்க ளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது காணொலி உரையில், “இந்தியா கூட்ட ணியின் வேட்பாளராகப் போட்டியிடும் அன்னியூர் சிவா என்கிற சிவசண் முகத்தை உங்களுக்கு தனியாக அறி முகம் செய்ய வேண்டியதில்லை! உங் கள் மண்ணின் மைந்தர் அவர்! மக்க ளோடு மக்களாக, மக்கள் பணியாற்றும் மக்கள் தொண்டர்தான் அன்னியூர் சிவா.

1986ஆம் ஆண்டு முதல், அன்னி யூர் சிவாவை நான் பார்த்துக் கொண்டி ருக்கிறேன். தடம் மாறாத, நிறம் மாறாத கலைஞரின் உடன்பிறப்புகளில் அவ ரும் ஒருவர். தலைவர் கலைஞரின் பாணியில் சொல்ல வேண்டும் என்றால், “தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்பதை மட்டுமே சிந்திக்கும் ரத்த நாளங்களில் ஒருவர்” என்று குறிப் பிட்டதுடன்,

எல்லா மக்களுக்கும் பொதுவான மக்கள் நலத்திட்டங்கள் தொடர, உங்க ளின் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க. கூட்ட ணியை தோற்கடிப்பது மூலமாக, சமூக நீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழகத்தின் உண்மைத் தொண்ட ரான அன்னியூர் சிவா என்ற சிவ சண்முகம், விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும் உண்மையான சட்ட மன்ற உறுப்பினராக இருப்பார்!

மறவாதீர், உங்கள் சின்னம் உதய சூரியன்! வாக்களிப்பீர் உதயசூரியன்!” என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்**

**இரண்டு நாள் பிரச்சாரம்!**

இதனைத் தொடர்ந்து கழக இளை ஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விக்கிரவாண்டித் தொகுதியில் நேற்று தேர்தல் பிரச்சா ரத்தை தொடங்கி தீவிர வாக்கு சேகரித் தார். இன்றும் சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டு இறுதிகட்ட வாக்கு சேகரிக்கிறார்.

நேற்று(7.7.2024)விக்கிரவாண்டித் தொகுதி திருவாமத்தூர், காணை, பனைமலைப் பேட்டை, அன்னியூர் ஆகிய இடங்களில் பொதுமக்களிடையே தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரித்தார்.

அதனைத் தொடர்ந்து இன்று (8.7.2024) தும்பூர், நேமூர், ராதா புரம், விக்கிரவாண்டி பேரூராட்சி உள் ளிட்ட பகுதிகளில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டு இறுதிகட்ட வாக்குச் சேகரிக்கிறார்.

விக்கிரவாண்டித் தொகுதியில் தேர் தல் பிரச்சாரம் இன்று மாலை 6 மணி யுடன் நிறைவடைகின்றது.

ஜுலை 10ஆம் தேதி அன்று வாக்குப் பதிவும், 13ஆம் தேதி அன்று வாக்கு எண்ணிக்கையும் நடைபெறுகின்றது.

---

### மக்களவைத் தேர்தலில் அயோத்தியில் தோற்கடித்ததைப் போல

## குஜராத்தில் சட்டப்பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.க.வைத் தோற்கடிப்போம் !

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறுதி!

*அகமதாபாத், ஜுலை 8-*

*மக்களவைத் தேர்தலின்போது அயோத்தியில் தோற்கடித்ததைப் போல, சட்டப்பேரவைத் தேர்தலின் போது குஜராத்தில் பா.ஜ.க.வை காங்கிரஸ் தோற்கடிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.*



*அகமதாபாத்தில் நடைபெற்ற கட்சித் தொண்டர்கள் மாநாட்டில் உரையாற்றிய காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி,” பாஜகவினர் எங்களை அச்சுறுத்தி எங்கள் அலுவலகத்தை சேதப் படுத்திய தன் மூலம் எங்களுக்கு சவால் விடுத் துள்ளனர். எங்கள் அலுவலகத்தை சேதப்படுத்தியது போல் நாங்கள் ஒன்றாக சேர்ந்து அவர்களின் அரசாங்கத்தை காலி செய்வோம். நான் சொல்வதை நீங்கள் குறித்துக் கொள்ளுங்கள். மக்களவைத் தேர்தலின்போது அயோத்தியில் தோற்கடித்ததைப் போல. சட்டப்பேரவைத் தேர்தலின்போது குஜராத்தில் நரேந்திர மோடியையும் பாஜகவையும் காங்கிரஸ் தோற்கடிக்கும். அதன்மூலம், குஜராத்தில் புதிய தொடக்கத்தை காங்கிரஸ் ஏற்படுத்தும்.*

*அயோத்தியில் பாஜக ஏன் தோற்றது என்று நாடாளுமன்றத்தில் அயோத்தி எம்.பி.யிடம் கேட்டேன். அப்போது அவர், ‘அயோத்தி மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்பட்டன. மக்களின் கடைகள், வீடுகள் இடிக்கப்பட்டன. அவர்களுக்கு எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை. சர்வதேச விமான நிலையம் என்ற பெயரில் விவசாயிகளின் நிலங்கள் எடுக்கப்பட்டன. அவற்றுக்கு இன்று வரை இழப்பீடு வழங்கப்படவில்லை. ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு அயோத்தி மக்கள் அழைக்கப்படவில்லை. இதன் காரணமாகவே, அயோத்தி மக்கள் கோபமடைந்து பாஜகவை தோற்கடித்தனர்’ என என்னிடம் தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத் தேர்தலின்போது, பிரதமர் மோடி அயோத்தியில் போட்டியிட விரும்பினார். அதற்காக 3 முறை கருத்துக்கணிப்பு நடத்தப் பட்டது. அயோத்தியில் மோடி நின்றால் அவர் தோற்கடிக்கப்படுவார். அதன்மூலம், அவரது அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வரும் என்று அவருக்கு தெரிவிக்கப் பட்டது. இதையடுத்தே, அவர் அயோத்தியில் போட்டியிடும் முடிவை கைவிட்டார்.*

*அயோத்தியில் பாஜக தோற்கும் என்றோ, நரேந்திர மோடி தன்னைக் காப்பாற்றிக் கொண்டு வாரணாசியை விட்டு வெளியேறுவார் என்றோ நீங்கள் கற்பனை செய்திருக்கிறீர்களா? அயோத்தியில் பாஜக தோற்றது போல் குஜராத்திலும் தோற்கப் போகிறது. குஜராத் மக்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான், நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. பயப்படாமல் பாஜகவை எதிர்த்துப் போராடினால் பாஜகவால் உங்கள் முன் நிற்க முடியாது.*

*இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.*


---

### கர்நாடக அணைகளில் இருந்து

## தமிழ்நாட்டிற்கு காவிரியில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு !

*பெங்களூரு, ஜுலை 8-*

*கர்நாடகத்தில் தென் மேற்கு பருவமழை தொடர்ந்து அதிகமாக பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. அதுபோல் மண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கப்பட்டணா தாலுகா கண்ணம்பாடி கிராமம் அருகே காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள கிருஷ்ணராஜசாகர்(கே.ஆர்.எஸ்.) அணைக்கும் நீர்வரத்து அதிகரித் துள்ளது. நேற்று முன்தினம் காலை 8 மணி நிலவரப்படி கே.ஆர்.எஸ். அணையின் நீர்மட்டம் 100.90 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 6,185 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில்*



*இருந்து வினாடிக்கு 554 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு இருந்தது. இந்த அணையின் மொத்த நீர்மட்ட கொள்ளளவு 124.80 அடி ஆகும்.*

*அதுபோல் மைசூரு மாவட்டம் எச்.டி. கோட்டை தாலுகா பீச்சனஹள்ளி கிராமம் அருகே கபிலா ஆற்றின் குறுக்கே உள்ள கபினி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று முன்தினம் காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 5,509 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி தண்ணீர் கபிலா ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. கபினி அணையின் நீர்மட்டம் 2,284 அடி (கடல் மட்டத்தில் இருந்து) ஆகும். நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 2,281.3 அடியாக இருந்தது.*

*இவ்விரு அணைகளில் இருந்தும் தமிழகத்திற்கு காவிரியில் மொத்தம் வினாடிக்கு 4,554 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. 5ஆம் தேதி அன்று இவ்விரு அணைகளில் இருந்தும் வினாடிக்கு 3,463 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு ஒகேனக்கல் அணைக்கு வந்து கொண்டுள்ளது.*